டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.10.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 103 | Madurai | Online Edition

# தமிழகத்தின் 18 மாவட்டங்களில் மிக கனமழை வாய்ப்பு!

சென்னை, அக்.21

வங்கக் கடலில் நாளை (23.10.26) உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, புயலாக வலுப்பெறும். தமிழகத்தில் இன்று (அக்.22) டெல்டா உள்ளிட்ட 18 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் 23-ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது புயலாக வலுப்பெறக்கூடும். தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது புயலாக வலுப்பெற வாய்ப்பில்லை.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.22) தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை, கோவை, நீலகிரி, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

திருச்சி, ஈரோடு, அரியலூர், பெரம்பலூர், கடலூர், நாமக்கல், விழுப்புரம், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக்கூடும்.

23-ம் தேதி கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தேனி, தென்காசி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, சிவகங்கை, ராமநாத புரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, அரியலூர், கடலூர், விழுப்புரம், திருப்பூர் மற்றும் பெரம்பலூர், மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

# ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட துவக்க விழாவில் விவசாயத்தின் மகத்துவங்களை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி பேராசிரியர்



திருப்பத்தூர், அக்.21

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் துவக்க விழா, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆலங்காயம் கிராமத்தில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஆலங்காயம் வேளாண்மை இணை இயக்குநர் K.மணி, வேளாண்மை உதவி இயக்குனர் ஸ்ரீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர் மோகன் சகாய ராஜ், கலந்துக் கொண்டு விழாவைச் சிறப்பித்தார். பெண் விவசாயி களுக்கான சர்வதேச ஆண்டு 2026 விழா நடைபெற்றது. பின்னர் வேளாண் அலுவலர் சோபனா, வேளாண்துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அதன்பின் பேசிய பாலாறு வேளாண் கல்லூரியின் வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியை முனைவர் அ.வெண்ணிலா மேரி, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தைப் பற்றியும் அதன் பயன்கள் குறித்தும் விளக்கினார். தொடர்ந்து விவசாயத்தின் மகத்துவம் பற்றியும், விவசாயத்தில் புதுப்புது தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பருத்தி உற்பத்தி திறன் இயக்க திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி



விருதுநகர், அக்.21

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரத்தில் பருத்தி விவசாயிகளின் விளைச்சலை அதிகரிக்கவும் தரத்தை உயர்த்தவும் நவீன தொழில்நுட்ப உதவிகள் வழங்கவும் பருத்தி உற்பத்தி திறன் இயக்கம் என்ற திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் விருதுநகர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) நாச்சியார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் ஜோதிமணி கலந்து கொண்டு பருத்தியில் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார். மேலும் இராஜபாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி இத்திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சங்களை எடுத்துரைத்தார். அதில் குறைந்த பரப்பளவில் அதிக செடிகளை பயிரிடும் முறைகளான உயர் அடர் நடவு முறை செயல் விளக்கத்திடலுக்கு ரூ.14,000, நெருக்கமான இடைவெளி சாகுபடி செயல் விளக்கத்திடலுக்கு செல்வதற்கு ரூ.18,500, மிக நீண்ட இழையுடைய பருத்தி சாகுபடி செயல் விளக்க திடல் ரூ.9,500, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செயல் விளக்க திடலுக்கு ரூ.7,500 மதிப்புள்ள பருப்பு சாகுபடிக்கு தேவையான இடுபொருள்களான பருத்தி விதைகள் நுண்ணூட் டங்கள் உயிர் உரங்கள் பூஞ்சான கொள்ளை மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது எனவும் மேலும் ட்ரோன் மூலம் பயிர் பாதுகாப்பு மருந்து தெளிப்புக்கு மானியம் ரூ.1500 வழங்கப்பட உள்ளது எனவும் எடுத்துரைத்தார்.

மேலும் இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் சந்தியா, துணை வேளாண்மை அலுவலர் ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாட்டை உதவி வேளாண்மை அலுவலர் சுந்தரி மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாண நாராயணன் ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

அரியலூர், அக்.21

அரியலூர் மாவட்டத்தில் 1,05,000 எக்டரில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் 70,000 எக்டரில் வேளாண் பயிர்களும், 35,000 எக்டரில் தோட்டக்கலை பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் 38,000 எக்டரில் பாசனப் பகுதியாகவும் 67,000 எக்டரில் மானாவாரியிலும் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. டெல்டா பகுதிகளான திருமானூர், தா.பழூர் மற்றும் ஜெயங் கொண்டம் வட்டாரங்களில் 12,000 எக்டரில் கால்வாய் பாசனம் நடைபெறுகிறது. மீதமுள்ள 26,000 எக்டரில் ஆழ்துளை கிணறு, ஏரி, குளம், கிணறு, பஞ்சாயத்து ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகள் மூலம் பாசன வசதி பெறுகிறது.

கால்வாய் பாசனம் மூலம் சாகுபடி செய்யும் பகுதிகளில் தண்ணீர் வராத பட்சத்தில் தற்பொழுது பெறக்கூடிய வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி மக்காச்சோளம் கம்பு சோளம், கேழ்வரகு போன்ற குறைந்த நீர் தேவை உள்ள பயிர்களை சாகுபடி செய்ய லாம். இதே பகுதியில் சிறு தானிய பயிர் சாகுபடிக்கு பின்னர் தை பட்டத்தில் மண்ணில் உள்ள ஈரப்பதத்தை பயன்படுத்தி மானா வாரியாக எள் விதைப்பு செய்து கூடுதல் மகசூலை பெறலாம். கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு டெல்டா அல்லாத பிற பகுதிகளில் 8000 எக்டரில் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

டெல்டா அல்லாத பிற பகுதிகளில் விவசாயிகள் நீண்ட கால நெல் ரகங்களை தவிர்த்து மத்திய கால ரகங்களான CO-52, CO-56, ADT-54 & TPS-5 நாற்று விட்டு நடவு செய்வதையும் தவிர்த்து போன்ற ஆண்களை நேரடியாக நெல் வயலில் மாணவரியாக 40 கிலோ விதையை ஒரு ஏக்கருக்கு என்ற முறையில் பயன்படுத்தி சாகுபடி செய்யலாம். நேரடி நெல் விதைப்பு கருவி மூலம் ஏக்கருக்கு 10– 15 கிலோ விதை மட்டுமே பயன்படுத்தினால் போதுமானது.

பாசன ஏரிகள் மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகள் மூலம் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் 400 கிலோ ஜிப்சம் 50 கிலோ இவற்றை இட்டு நன்கு உழவு செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தற்பொழுது பருவமழை தொடங்கியுள்ள நிலையில் ஏக்கருக்கு 40 கிலோ நேரடி நெல் விதைப்பு முறையில் விதைப்பு செய்து மகசூல் அடையலாம்.

அரியலூர் மாவட்டத்தில் சராசரியாக 20000 ஹெக்டர் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது தற்பொழுது 20 முதல் 25 நாள் பயிராக உள்ளது பயிர்களில் படைப்புழு தென்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்காச்சோளம் மகசூல் அதிகரிக்க சிறுதானிய நுண்சத்து ஏக்கருக்கு 5 கிலோவும் சிங்சல்பேட் 10 கிலோவும் விதைப்பு செய்து 25 நாள் இடைவெளியில் இரண்டு முறை இடுவதால் மக்காசோள பயிரில் மகசூலை அதிகரிக்கலாம்.

தை பட்டத்தில் மக்காச்சோள அறுவடைக்கு பின் மண்ணில் இருக்கும் ஈரப்பத்தை பயன்படுத்தி எள் விதைப்பு செய்து ஏக்கருக்கு 200 முதல் 300 கிலோ மகசூல் பெறலாம். கடலை பயிர் செய்யும் வட்டாரங்களான ஜெயங்கொண்டம், தா.பழுர் மற்றும் ஆண்டிமடம் வட்டாரங்களில் சுமார் 7,000 ஹெக்டர் பரப்பளவில் கடலை சாகுபடி செய்யப்படுகிறது.

எல்–நினோ எனப்படும் பருவநிலை மாற்ற நிகழ்வால் விவசாயிகள் கடலை விதைப்பின் போது பொட்டாசியம் குளோரைடு 2 சதவீதம் கரைசலை கொண்டு விதை நேர்த்தி செய்து வறட்சியை தாங்கி வளர்வதால் உற்பத்தியை அதிகரிக்கலாம். மேலும் GROUND RICH-2 ஏக்கருக்கு 2 கிலோ விதம் இரண்டு முறை தெளிப்பு செய்ய வேண்டும்.

கடலையில் ஊடுபயிராக உளுந்து விதைப்பு செய்வதன் மூலம் கூடுதலாக 150 முதல் 200 கிலோ வரை உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெறலாம்.

கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் பாச்சுவதால் அதிக மகசூல் பெறலாம். கரும்பில் தோகை உரித்து நிலப்போர்வை அமைப்பதன் மூலம் நீர் ஆவியாவதை தடுத்து களை கட்டுப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் கரும்பில் கூடுதல் மகசூல் பெறலாம்.

ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம் மற்றும் தா.பழுர் பகுதிகளில் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகள் வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி நவம்பர் டிசம்பர் மாதங் களில் உளுந்து பயிரை ஊடுபயிராக பயிர் செய்வதன் மூலம் மண்ணின் தழைச்சத்து நிலைநிறுத்தப்படுவதுடன் ஏக்கருக்கு 200 முதல் 300 கிலோ கூடுதலாக உளுந்து பயிரில் மகசூல் பெறலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகள் அதிகம் வளர்க்கப்படு வதால் கால்நடைகளுக்கு தேவையான தீவனம் ஒரு நாளைக்கு அதன் உடல் எடையில் 10 சதவீதம் தீவனமாக கொடுக்கப்பட வேண்டும்.

இதில் மூன்று பங்கு தானிய வகையாகவும் ஒரு பங்கு பயிர் வகை தீவனமாகவும் அளிப்பது மிகவும் சிறந்தது. இதை கருத்தில் கொண்டு நெல்லில் உள்ள வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் தட்டை இவற்றை தானிய வகையிலும் உளுந்து செடி மற்றும் கடலை செடியை பயிர் வகை பயிரிலும் ஊட்டச்சத்தாக கால்நடை களுக்கு தீவனமாக அளிக்கலாம். மேலும் தீவன உற்பத்தி அதிகரிக்க பாசன வசதி உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் CO-5, எருமைப்புல், குதிரை மசால், வேலி மசால், போன்றவை பயிரிடலாம். மேலும் மரக்கன்றுகளுக்கு இடையே நிழலை தாங்கி வளரும் கினியா புல்லும் வறட்சி மற்றும் குறைந்த சத்து உள்ள நிலங்களில் கொழுக்கட்டை புல் மற்றும் முயல் மசால் போன்ற புல் வகைகளை சாகுபடி செய்து கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கலாம்.

மாவட்டத்தில் தற்போது விதைநெல் 40 டன் குறுகிய மற்றும் மத்திய கால ரகங்களான CO-52, CO-56, ADT-54, TPS-5 ரகங் களும், உளுந்து விதை வம்பன் 8,10,11 போன்ற ரகங்கள் 25 டன் இருப்பில் உள்ளது, மக்காச்சோளம் HTMH 5402 ரகம் 28 டன் இருப்பில் உள்ளது. இதை தவிர பாரம்பரிய நெல் ரகங்களானசிவன் சம்பா, கிச்சடி சம்பா மற்றும் இலுப்பை பூ சம்பா 3 டன் இருப்பில் உள்ளது. திரவ உயிர் உரம் 5000 லிட்டர் இருப்பில் உள்ளது நெல் நுண்சத்து 25 டன் இருப்பில் உள்ளது. உயிரியல் காரணிகள் 10 டன் இருப்பில் உள்ளது இதை தவிர்த்து தனியார் கடைகள் மற்றும் கூட்டுறவு சங்ககளில் போதுமான அளவு உரங்கள் மற்றும் விதைகள் இருப்பில் உள்ளன.

தற்பொழுது தனியார் கடைகளில் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா 4056 டன்னும் டிஏபி 1730 டன்னும் காம்ப்ளக்ஸ் 2826 டன்னும் பொட்டாஷ் 678 டன்னும் சிங்கள் சூப்பர் பாஸ்பேட் 578 டன்னும் இருப்பில் உள்ளது.

மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 950 மில்லி மீட்டர் ஆகும். தற்போது வேளாண் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மூலம் அளிக்கப்பட்டுள்ள கணிப்பின்படி மாவட்டத்திற்கு இயல்பான மழை அளவு பெறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த சூழ்நிலையை பயன்படுத்தி மாவட்ட விவசாயிகள் உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுத்து மகசூலை பெருக்கலாம்.

மேற்கண்ட விபரங்களை அறிந்து எல்–நினோ தாக்கத்திலிருந்து பயிர்களை காத்து வரக்கூடிய வடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி பருவத்திற்கு ஏற்ப பயிர்களை பயிர் செய்து அதிக மகசூல் அடையமாறு அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# விதை விரிவாக்க மைய வேளாண்மை அலுவலரை சந்தித்து உரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், அக்.21

நாகை மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4-ம் ஆண்டு பயிலும் இளநிலை வேளாண் மாணவர்கள் கோட்டூர் ஒன்றியத்தில் தங்கி கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் களப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.



இத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நேரடி தொடர்பை ஏற்படுத்தி, நடைமுறை அனுபவத்தைப் பெற மாணவர்களுக்கு உதவுகிறது.




இதன் மூலம் கிராமப்புற அனுபவங்கள் மற்றும் அவர்களின் சூழ்நிலைகளை புரிந்து கொள்ளுதல், விவசாயிகளின் பிரச்சனைகளை கண்டறிதல், புதிய வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்தல் ஆகியவை குறித்து அறிந்து கொண்டனர்.கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்ட களப்பயிற்சியின் ஒரு பகுதியாக, கோட்டூர் ஒன்றியம், திருவாரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் விதை விநியோக மையத்தை நாகப்பட்டினம் வேளாண் கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.

இப்பார்வையின்போது விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கப்படும் முறைகள், விதை சேமிப்பு மற்றும் விநியோக நடைமுறைகள் குறித்து அறிந்து கொண்டனர்.

மேலும், பல்வேறு பயிர்களுக்கான விதைகளின் வகைகள், விதைத் தரம், முளைப்புத் திறன், விதை சுத்திகரிப்பு, விதை நேர்த்தி மற்றும் சரியான சேமிப்பு முறைகள் குறித்து கோட்டூர் ஒன்றிய விதை விரிவாக்க மைய வேளாண் அலுவலர் ஸ்ரீவதினியை சந்தித்து மாணவர்கள் கேட்டு அறிந்து கொண்டனர்.

விவசாயிகளின் தேவைக்கேற்ப விதைகள் வழங்கப்படுவதுடன், விதைகளைத் தேர்வு செய்வது மற்றும் பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை வேளாண் கல்லூரி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

இந்தப் பார்வையின் மூலம் தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், விதை விநியோக மையத்தின் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை சார்ந்த சேவைகள் குறித்து நடைமுறைகளை வேளாண் கல்லூரி மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

# மழை நீர் தேங்கிய வயல்களை பாதுகாக்கும் வழிமுறைகள்

## வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுரை

திருவள்ளூர், அக்.21

வடகிழக்கு பருவமழை காரணமாக பெய்த கன மழையால் திருவள்ளூர் வட்டாரத்தில் பெரும்பாலான இடங்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. மழை நீர் தேங்கிய வயல்களில் நெற் பயிர்களை காப்பாற்றுவது எப்படி என்று வேளாண்மை துறை பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

இது குறித்து திருவள்ளூர் வேளாண்மை உதவி இயக்குநர் தெய்வேந்திரன் கூறியுள்ளதாவது, பருவமழையின் காலத்தில், வயல்களில் தேங்கும் அதிகப்படியான மழை நீரை உடனுக்குடன் வடிக்க வேண்டும். மழையால் மண்ணிலிருந்து அடித்து செல்லப் படும் நைட்ரஜன் மற்றும் பொட்டாசியம் சத்துக்களை ஈடு செய்ய 25 சதவீதம் கூடுதலாக யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். பயிர்களில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு அறிகுறிகள் காணப்பட்டால், யூரியா மற்றும் நுண்ணூட்ட உரங்களை இலை வழியாக தெளிக்கவும், அசோஸ்பைரில்லம் 500 ml / ஏக்கர் மற்றும் பாஸ்போபாக்டீரியா 500 ml/ ஏக்கர் போன்ற திரவஉயிர் உரங்களை எருவுடன் கலந்து நேரடியாக வயலில் இட வேண்டும்.

வடகிழக்கு பருவமழையில், அதிகமாக ஓடும் நீரினை பண்ணைக் குட்டைகள் மூலம் சேமித்து, நிலத்தின் நீர்மட்டத்தை உயர்த்தலாம். மழை காலங்களில் இலை சுருட்டுப் புழு தாக்குதல் குறைவாகவும் இலைப்புள்ளி, பாக்டீரியா இலைகருகல் நோய், குலை நோய் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. பூச்சி நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் ஏற்பட்டால், வேப்ப எண்ணெய் 3 லிட்டர்-ஐ 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

அறுவடை நிலையில், தூர் கட்டும் நிலையில் உள்ள நெல் வயல்களில், பருவமழையினால் தேங்கும் மழைநீரினை முழுவது மாக வடிக்க வேண்டும். நெல் வயல்களில் உள்ள மழை நீரினை வடித்த பிறகு, மேலுரமாக ஏக்கருக்கு யூரியா 22 கிலோ, ஜிப்சம் 18 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ இடுவதன் மூலம், மழையினால் பயிர்களில் ஏற்படும் ஊட்டச்சத்துகுறைபாட்டை சரி செய்யலாம்.

பருவமழையினால் பாதிப்பு அடையும் இளம்பயிர் மற்றும் தூர் கட்டும் பயிர்களை பாதுகாப்பதற்கு, ஏக்கருக்கு 1 கிலோ துத்தநாக

சல்பேட் மற்றும் 2 கிலோ யூரியாவை 200 லிட்டர் நீரில் ஒரு இரவு வைத்து, மறுநாள் மேல் உள்ள தெளிந்த நீரினை மழை நின்றவுடன் தெளிக்க வேண்டும்.

மேலும், விவசாயிகள் பருவமழையால் ஏற்படும் பாதிப்புகளை தெரிவித்து ஆலோசனைகள் பெற சம்மந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# வாழைத்தண்டுப் பொறி மற்றும் வாழைக்கன்று நேர்த்தி பற்றி பயிற்சி அளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, அக்.21

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில், நாளந்தா வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் செ.ஆதித்யன், பெ.அன்பழகன், செ.தேவஅபிசேக், க.தினேஷ், வி.மதுபாலன், செ.நிரஞ்சன், சு.ராஜேந்திர பிரசாத், அ.விஜயசாரதி, ரா.விஜேஷ், அ.விமல்ராஜ் மற்றும் கு.விஷ்ணு பிரசாத் ஆகியோர் முதல்வர் முனைவர் வெங்கடபிரபுவின் வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியர் ம.மோகன்ராஜ் மேற்பார்வையில் ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் கண்ணன் மற்றும் நந்தகுமார் ஆகியோர் ஆலோசனை யிலும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கிழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, சிறுமயங்குடி கிராமத்து விவசாயிகளுக்கு வாழைத்தண்டுப் பொறி மற்றும் வாழைக்கன்று நேர்த்தி முறையை களவிளக்கம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இக்களவிளக்க செயல்முறை விவசாயி ஸ்ரீநிவாசனின் வாழைத் தோட்டத்தில் மற்ற விவசாயிகள் முன்னிலையில் நடைபெற்றது. இதில், மாணவர்கள் வாழைத் தண்டுப் பொறி, தண்டு துளைப் பானைக் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் வாழைக்கன்று நேர்த்தி ஆகியவற்றை செய்து காட்டி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளித்ததோடு அவர்களின் சந்தேகங்களுக்கும் தீர்வு அளித்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# உழவன் செயலி விவசாயிகளுக்கு உதவும் செயலி!




தமிழக வேளாண் துறையால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்த செயலி (UZHAVAN APP) அறிமுகப்படுத்தப்பட்டது. இது தமிழ், ஆங்கில மொழிகளில் விபரங்களை அறிய முடியும். இதனை விவசாயிகள் தங்களது செல்போனில் பதவிறக்கம் செய்து தங்களுக்கு தேவையான வேளாண் சார்ந்த விபரங்களை உடனுக்குடன் தாமதமின்றி பெற்று பயனைடைலாம். இது குறித்து விரிவாக பார்ப்போம்.

**1) வேளாண் திட்டங்கள்**

இனம் வாரியாக மற்றும் பயனாளிகள் தகுதி குறித்து விபரங்களை தெரிந்து கொள்ளலாம். வேளாண் துறை சார்ந்த திட்ட பயன்களை பெறுவதற்கு இந்த செயலி மூலமாக முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**2) விதை மற்றும் உரம் இருப்பு**

தங்களது வட்டாரத்திலுள்ள கூட்டுறவு மற்றும் தனியார் அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள விதை இருப்பு (SEED STOCK) விலை விபரம் பற்றி தெரிந்து கொள்ளலாம். அதுபோல உரம் விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

**3) வேளாண் இயந்திரங்கள் வாடகை**

அரசு மற்றும் தனியார் மையங்களில் வாடகைக்கு விடப்படும் வேளாண் இயந்திரங்கள் (AGRICULTURAL MACHINERY) இருப்பு வாடகை விபரங்களை தெரிந்து தேவையான இயந்திரங்களை முன்பதிவு செய்து பயன்படுத்தலாம்.

**4) ஒழுங்கு முறை விற்பனை கூட நிலவரம்**

தமிழகம் முழுவதும் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அன்றைய தேதியில் ஏலத்தில் தேவையான விளைப் பொருட்கள் விலை விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

**5) வானிலை விபரம் அறிய?**

அடுத்த 4 நாட்களுக்கு விவசாயிகள் தாங்கள் வசிக்கும் பகுதியின் வானிலை அடிப்படையாக கொண்டு, மேற்கொள்ள வேண்டிய பயிர் சாகுபடி குறித்து அறிவுரைகளை தெரிந்து கொள்ளலாம்.

**6) உழவர்–அலுவலர் தொடர்பு**

கிராம அளவிலான உள்ள, உ.வே அலுவலர்களின் நிரந்தர பயணத் திட்டத்தில் சம்மந்தப்பட்ட அலுவலரின் பெயர், செல்போன் எண், வருகை இடம் மற்றும் தேதி ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம்.

**7) பயிர் காப்பீடு**

பயிர் காப்பீடு செய்தது முதல் இழப்பீடு பெறும் நிலை வரையிலான தகவல்களை பதிவு செய்த தொலைபேசி எண் மூலமாக பெற முடியும்.

இது போன்ற 24 இனங்களை பற்றி உழவன் செயலி வாயிலாக தெரிந்து கொள்ளலாம். விவசாயிகளுக்கு இந்த செயலியால் நேரம் காலம் மிச்சப்படுவதுடன், தேவையற்ற அலைச்சல் பண விரயம் தடுக்கப்படுகிறது.

என்ன நீங்க உழவன் செயலியை உங்களது போனில் பதிவு இறக்கம் (DOWN LOAD) செய்து பாருங்க உடனே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# சோளத்தில் வரும் ஹைட்ரஜன் சயனைடு (HCN) நச்சுத்தன்மை குறித்த விழிப்புணர்வு



திருச்சி, அக்.21

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள், மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதாஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர் கல்லூரி முதல்வர் முனைவர். வெங்கட்பிரபுவின் வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியர் மோகன்ராஜ் மேற்பார்வையிலும், ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் கனகராஜ் மற்றும் தமிழ்ப்பாவை ஆகியோரின் ஆலோசனையிலும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்டம், பெருமாள்பாளையம் கிராமத்தில் சோளத்தில் காணப்படும் ஹைட்ரஜன் சயனைடு (HCN) நச்சுத்தன்மை குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். சோளச் செடிகளில், குறிப்பாக இளம் பயிர்கள் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களில், ஹைட்ரஜன் சயனைடு (HCN) உருவாகும் அபாயம் உள்ளது. மேலும் இப்பயிர் களை அதிக அளவில் உட்கொள்ளும்போது கால்நடைகளுக்கு நச்சுத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது.

இதுகுறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த மாணவிகள், சோளப் பயிரின் இளம் தழைகளை கால்நடைகளுக்குப் பசுந் தீவனமாக வழங்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், வறட்சிக்குப் பிறகு மீண்டும் துளிர்க்கும் பயிர்களை உடனடியாக கால்நடைகளுக்கு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். மேலும், சோளப் பயிரில் கூஷிளீஹி நச்சுத் தன்மையின் அறிகுறிகள், கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் நச்சுத்தன்மையைத் தவிர்க்கும் பாதுகாப்பு முறைகள் குறித்தும் செயல்விளக்கம் அளித்த மாணவிகள் விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கொண்டைக்கடலை-விதை உற்பத்தி தொழில் நுட்பம் மற்றும் விதை பரிசோதனையின் அவசியமும்

திருப்பூர், அக்.21

இப்பயிர் பனி பொழிவு காலத்தில் தமிழ்நாட்டில் சராசரியாக 6068-73 எக்டர் பரப்பளவிலும் திருப்பூர் மாவட்டத்தில் 3773 ஏக்கர் பரப்பளவிலும் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பரவலாகவும். ஈரோடு. சேலம், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கரிசல் மண் பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது.





கொண்டைக்கடலையில் தேசி மற்றும் காபுலி கடலை என்னும் இரு வகைகள் உள்ளன. தேசி வகை சிறியதாகவும் காபுலி வகை கடலை வெள்ளையாகவும், அளவில் பெரியதாகவும் இருக்கும். தமிழ்நாட்டில் தேசி கடலை வகை கோ1, கோ 2, கோ 3 மற்றும் கோ 4 தற்போது பரவலாக பயிரிடப்படுகிறது.

**பருவம் மற்றும் இரகங்கள்**

| *மாவட்டம் / பருவம்*<br>*நவம்பர் (குளிர்காலம்) மானாவரி* | *இரகங்கள்* |
|---|---|
| வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், கரூர், தர்மபுரி, புதுக்கோட்டை, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி | கோ 3 மற்றும் கோ 4 வயது (85நாட்கள்) |

**விதை உற்பத்திக்கான தொழில் நுட்பங்கள் மற்றும் பயிர் மேலாண்மை**

**நிலம் தயாரித்தல்**

விதை உற்பத்திக்குத் தேர்வு செய்யப்பட்ட நிலம் தான் தோன்றிப் பயிர் அற்றதாக இருத்தல் வேண்டும். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில் கடந்த பருவத்தில் பிற மற்றும் அதே இரகப் பயிர் பயிரிடப் பட்டிருக்கக் கூடாது. அவ்வாறு பயிரிடப்பட்டிருந்தால் சான்றளிப்புத் துறையினால் சான்றளிக்கப்பட்ட அதே இரகமாக இருத்தல் வேண்டும். நிலத்தை 3 – 4 முறை புழுதிபட நன்கு உழ வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் என்ற அளவில் தொழு உரம் இடவேண்டும்.

**விதை அளவு**

கோ 3 : 36 கிலோ / ஏக்கருக்கு
கோ 4 : 30 கிலோ / ஏக்கருக்கு

**பயிர் இடைவெளி**

தேசி இரகத்திற்கு செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளி மற்றும் வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளி விடவேண்டும். காபுலி இரகத்திற்கு செடிக்கு செடி 15 செ.மீ. மற்றும் வரிசைக்கு வரிசை 45 செ.மீ. இடைவெளி விடவேண்டும்.

**பயிர் விலகு தூரம்**

இடைவெளி விட்டு இருத்தல் வேண்டும்.

**விதைப்பு முன் விதை நேர்த்தி**

விதைகளை 1 சதவீத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில், ஒரு பங்கு கரைசலில் 3 பங்கு விதை என்றளவில் 3 முதல் 4 மணி நேரம் ஊற வைத்துப் பின் நிழலில் உலர்த்தி விதை களை விதைப்பிற்குப் பயன்படுத்துதல் வேண்டும். பயறு வண்டு தாக்கிய விதைகளை விதைப்பிற்குப் பயன்படுத்துதல் கூடாது.

**அறுவடை**

விதைகளை பூத்த 35-40 நாட்களுக்குள் வினையியல் முதிர்ச்சி அடைகின்றன. பயிரில் 70 முதல் 80 சத காய்கள் பழுப்பு நிறம் அடைந்தவுடன் பயிரினை அறுவடை செய்யலாம்.

**விதைச் சுத்திகரிப்பு**

விதைகள் இரகங்களுக்கு ஏற்றவாறு 13/64‘ (5.3 மி.மீ) அல்லது 18/64‘ (7.2 மி.மீ) வட்ட கண் அளவு கொண்ட சல்லடைகளைக் கொண்டு சலித்து நல் விதைகளைப் பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை 8 முதல் 10 சத ஈரப்பதத்திற்கு உலர்த்த வேண்டும்.

**அறுவடைக்கு பின் விதை நேர்த்தி**

விதைகளை திரம் அல்லது கார்பெண்டசிம் மருந்தினை ஒரு கிலோவிற்கு 2 கிராம் என்ற அளவில் 5 மி.லி. தண்ணீருடன் சேர்த்து விதை நேர்த்தி செய்ய வேண்டும் (அல்லது) விதைகளுடன் ஹாலோஜன் கலவையை (கால்சியம் ஆக்ஸி குளோரைடு, கால்சியம் கார்பனேட் மற்றும் அரப்புத் தூள் 5:4:1 என்ற விகிதத்தில் கலந்த கலவை) ஒரு கிலோவிற்கு 3 கிராம் என்ற அளவில் கலந்தும் விதை நேர்த்தி செய்யலாம் (அல்லது) விதை மற்றும் தானிய முறை சேமிப்பிற்காக விதைகளை ஒரு கிலோ விதைக்கு 10 கிலோ என்ற அளவில் ஊக்குவிக்கப்பட்ட களி மண்ணினை உலர் கலவையாக கலந்து விதை நேர்த்தி செய்யலாம்.

**விதைச் சேமிப்பு**

விதைகளின் ஈரப்பதத்தினை 8 முதல் 9 சதமாகக் குறைத்து பின்

சாக்கு அல்லது துணிப் பைகளில் குறுகிய கால சேமிப்பிற்காக (8-9 மாதங்கள்) சேமித்து வைக்கலாம். விதைகளின் ஈரப்பதத்தினை குறைத்து பின் உள்உறை கொண்ட சாக்குப் பைகளில் மத்திய, இடைக்கால சேமிப்பிற்காக (12-15 மாதங்கள்) சேமித்து வைக்கலாம்.

**விதைப்பரிசோதனையின் அவசியம்**

கொண்டைக்கடலை பயிரினை வருடத்திற்கு ஒரு முறையே பயிரிடுவதன் காரணமாக விதை இருப்புக் காலம் அதிகமாக உள்ளதால், விதைப்பு செய்வதற்கு முன் விதைப்பரிசோதனை செய்து பயிரிட்டால், போதுமான பயிர் எண்ணிக்கை பராமரித்து சிறந்த மகசூல் பெற முடியும். விவசாயப் பெருமக்கள் தங்களிடமுள்ள கொண்டைக்கடலை விதையின் தரத்தினை அறிந்திட அந்தந்த மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டுள்ள விதைப் பரிசோதனை நிலையங்களில் ஒரு கிலோ கொண்டைக்கடலை விதையினையும், ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்)-யை பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயன்பெறுமாறு திருப்பூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சி.வசந்தி மற்றும் வேளாண்மை அலுவலர் ஜோ.மோ.அறிவுமதி ஆகியோர் தெரிவித்தனர்.

## கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் மூலமாக வரைபடம் வரைந்து விளக்கமளித்த வேளாண் மாணவிகள்



நாகப்பட்டினம், அக்.21

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதியாண்டு மாணவிகளால் கிராம வரைபடம் வரையும் நிகழ்வானது சித்தமல்லி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் கிராம மக்கள், உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் மாணவிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வு மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலை புரிந்து கொள்வதற்கும் கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதில் கிராமத்தின் சமூக வரைபடம் மற்றும் மூன்று வருடத்திற்கான நெல் சாகுபடியினை பட்டை விளக்கப்படம், பிரச்சனைகளுக்கான மர வரைபடம், வென் படம், மக்கள் தொகை விளக்க வரைபடம் ஆகியவற்றை வரைந்தனர். இதன் மூலம் இக்கிராமத்தின் வளங்கள் மற்றும் பயிர் சாகுபடியில் பிரச்சனைகள் குறித்த தகவல்களை மாணவிகள் சேகரித்தனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சாகரிகா கடற்பாசி உரங்கள் – ஒரு பார்வை

சென்னை, அக்.21

இப்கோ சாகரிகா என்பது சிவப்பு மற்றும் பழுப்பு நிறக் கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை அடிப்படையிலான தாவர வளர்ச்சி ஊக்கி ஆகும். இது திரவம் மற்றும் குருணை வடிவங்களில் கிடைக்கிறது. நெல், மக்காச்சோளம், கரும்பு, நிலக்கடலை உள்ளிட்ட பல்வேறு பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், விளைச்சல் மற்றும் தரத்தை அதிகரிக்கவும் சாகரிகா உதவுகிறது.

**1. சாகரிகா குருணை**

**பயன்படுத்தும் முறை :** பயிர் முளைத்த 15 – 25 நாட்களுக்குள், ஏக்கருக்கு 10–20 கிலோ என்றளவில் இடவேண்டும். தோட்டப் பயிர்களில், செடிக்கு 100 – 150 கிராம் என்றளவில் இடவேண்டும்.

**2. சாகரிகா திரவம்**

**இலைவழித் தெளிப்பு :** ஒரு லிட்டர் நீரில் 5 மி.லி. சாகரிகா திரவத்தைக் கலந்து தெளிக்கலாம்.

**முதல் தெளிப்பு :** பயிரின் வளர்ச்சிப் பருவத்தில், ஏக்கருக்கு 500 மி.லி.

**இரண்டாம் தெளிப்பு :** பூக்கும் பருவத்திற்கு முன், ஏக்கருக்கு 500 மி.லி.

**சிறப்பம்சங்கள் :** 14%–18% சாம்பல் சத்துக்கள், அமினோ அமிலங்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகள் கொண்டது.

**கிடைக்கும் அளவுகள்**

குருணை : 10 கிலோ / 25 கிலோ
திரவம் : 100 மி.லி. / 250 மி.லி. / 500 மி.லி. / 1,000 மி.லி.

**நன்மைகள் :** பூக்கள் உதிர்வதைக் குறைத்து காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். வேர் மற்றும் தண்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. பயிர்களில் மகசூல் மற்றும் தரத்தை மேம் படுத்துகிறது. பயிர்களின் வறட்சியைத் தாங்கும் தன்மையை அதிகரிக்கிறது. மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். இயற்கை விவசாயத்திற்கு ஏற்றது.



# நெல் நாற்றுகளை நனைக்கும் முறை [Seedling Dipping] குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, அக்.21

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிகழ்வின் கீழ்,பிச்சாண்டவர் கோவில் கிராம விவசாயிகளுக்கு, நெல் சாகுபடியில் நாற்று நடவு செய்வதற்கு முன்பு நாற்றுகளை உரிய கரைசலில் நனைக்கும் முறை (Seedling Dipping) குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இம்முறையில் நெல் நாற்றுகளின் வேர்ப்பகுதியை பரிந்துரைக்கப்பட்ட உரம் அல்லது தாவரப் பாதுகாப்புக் கரைசலில் குறிப்பிட்ட நேரம் நனைத்து, பின்னர் வயலில் நடவு செய்வது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இம்முறையைப் பின்பற்றுவதன் மூலம் பயிரின் ஆரம்பகால வளர்ச்சியை மேம்படுத்தவும், பரிந்துரைக்கப்பட்ட தாவரப் பாதுகாப்புக் கரைசல்களைப் பயன்படுத்தும்போது பல வகையான நோய் மற்றும் பூச்சித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தவும் உதவும் எனவும், பயன்படுத்தப்படும் கரைசல் மற்றும் அதன் அளவு பயிரின் தேவைக்கேற்பவும், வேளாண் துறையின் பரிந்துரைப்படியும் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வின்போது விவசாயிகள் ஆர்வத்துடன் மாணவிகளிடம் சந்தேகங்களைக் கேட்டறிந்து, நாற்று நனைக்கும் முறையின் செயல்முறை மற்றும் பயன்களைத் தெரிந்துகொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சுற்றுச்சூழலுக்கு உகந்த பாக்கு மட்டை தட்டுகள் தயாரிப்பு தொழிற்சாலையை பார்வையிட்ட வேளாண் மாணவர்கள்




திருவாரூர், அக்.21

வேளாண் மாணவர்கள் அக்டோபர் 21ஆம் தேதி, பாக்கு மட்டையிலிருந்து தட்டுகள் தயாரிக்கும் யசோதா தொழிற்சாலையைப் பார்வையிட்டு, அதன் உற்பத்தி முறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடி செயல்விளக்கம் பெற்றனர்.

இத்தொழிற்சாலையின் உரிமையாளர் பி.ஐயப்பன், பாக்கு மட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு அளவுகளில் தட்டுகள் தயாரிக்கும் முறைகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக விளக்கினார். முதலில், சேகரிக்கப்பட்ட பாக்கு மட்டைகள் தண்ணீரில் ஊறவைக்கப்பட்டு, பின்னர் நன்கு உலர்த்தப்படுகின்றன.

அதன் பிறகு, உலர்ந்த பாக்கு மட்டைகள் தட்டு தயாரிக்கும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டு, தேவையான வெப்பநிலை மற்றும் அழுத்தத்தைப் பயன்படுத்தி வெவ்வேறு அளவுகளில் தட்டுகளாக வடிவமைக்கப்படுகின்றன.

மேலும், 5, 6, 8, 10 மற்றும் 12 அங்குல அளவுகளில் தட்டுகள் தயாரிக்கப்படுவதாகவும், ஒவ்வொரு அளவிலான தட்டுகளுக்கும் இயந்திரத்தின் மேல் மற்றும் கீழ்ப்புற வெப்பநிலைகள் மாறுபடும் என்றும் உரிமையாளர் விளக்கினார். இதற்காக இயந்திரத்தின் வெப்பநிலையைச் சரியான முறையில் அமைப்பது தட்டுகளின் தரத்தையும் வடிவத்தையும் உறுதிப்படுத்த உதவுகிறது.

இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தட்டுகள் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. தட்டுகளின் அளவைப் பொறுத்து விலையும் மாறுபடுகிறது. பாக்கு மட்டைகளை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதன் மூலம் வேளாண் சார்ந்த கழிவுகளைப் பயனுள்ள பொருட்களாக மாற்ற முடியும் என்பதையும் மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

மேலும், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பதற்கும், இயற்கை வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும் இத்தகைய சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

இத்தொழிற்சாலைப் பார்வையின் மூலம், வேளாண் மூலப் பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுதல், சிறுதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்முனைவின் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர்.



# கால்நடைகளுக்கு குடிநீர் மூலம் பரவும் நோய்களைத் தடுக்கும் வழிமுறைகள்

'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவரின் வாக்கு. மனிதர்களுக்கு எப்படி சுத்தமான குடிநீர் அவசியமோ, அதேபோல் கால்நடைகளுக்கும் அவசியம். கால்நடைகளின் உடம்பின் ஒவ்வொரு திசுக்களிலும் தண்ணீர் உள்ளது. கறவை மாடுகளின் உடல் எடையில் 70 சதவிகிதமும், பாலில் 87 சதவிகிதமும் தண்ணீர் உள்ளது. ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்ய 4-5 லிட்டர் தண்ணீர் தேவை. ஒரு மாடு ஒரு நாளைக்கு 40-80 லிட்டர் தண்ணீர் குடிக்கும். கறவை மாடு 100 லிட்டர் வரை குடிக்கும். உணவின்றி கால்நடைகள் ஒரு மாத காலம் வரை உயிர்வாழ இயலும். ஆனால் தண்ணீரின்றி ஒரு வாரம்கூட உயிர்வாழ முடியாது. தண்ணீர் குறைவானால் தீவனம் எடுக்கும் அளவு 2-3% வரை குறைகிறது. கால்நடைகளின் ஆரோக்கியத்தில் சுத்தமான குடிநீர் முக்கிய பங்கு வகிக்கிறது. காலநடைகளுக்கு எவ்வாறு தீவனம், கொட்டகை மற்றும் நோய் பராமரிப்பில் அக்கறை செலுத்து கிறோமா அதைப்போலவே கால்நடைகளுக்கு அளிக்கப்படும் குடிநீருக்கும் முக்கியத்துவம் கொடுத்து சுத்தமான குடிநீரை கால்நடைகளுக்குக் கொடுக்கும் பொழுது குடிநீரால் பரவக்கூடிய பெரும்பான்மையான நோயை தடுக்க முடியும். ஏனெனில் அசுத்த மான தண்ணீரே கால்நடைகளுக்கு நோயை பரப்பும் காரணியாக மாறுகிறது. அதனால் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் குடிநீரால் பரவக்கூடிய நோய்களைப் பற்றியும், தடுக்கும் முறைகள் பற்றியும், சுத்தமான குடிநீர் பற்றியும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

**குடிநீர் மூலம் பரவும் நோய்கள்**

**அ) குடற்புழு நோய்கள் :** அசுத்தமான நீரினை கால்நடைகளுக்கு கொடுக்கும் பொழுது நீரில் உள்ள புழுக்களின் முட்டைகள் மற்றும் லார்வாக்கள் கால்நடைகளுக்குப் பரவி இரத்த சோகை, எடை குறைவு, சினை பிடிக்காமை மற்றும் இதர உடல் உபாதைகளை ஏற்படுத்தக்கூடும்.

**ஆ) நுண்ணுயிரி மூலம் உண்டாகும் நோய்கள் :** அடைப்பான், தொண்டை அடைப்பான், ஈ. கோலை, கிரிப்டோஸ்போரிடியம், புருசெல்லோசிஸ் போன்ற நோய்களும் கால்நடைகளுக்கு அசுத்தமான குடிநீர் மூலம் பரவும். மேலும் மழை காலங்களில் கால்நடைகளின் குடிநீரில் எலி, நாய் ஆகியவற்றின் சிறுநீர் கலக்க

நேரிடும் பொழுது லெப்டோஸ்பைரோசிஸ் எனப்படும் எலிக் காய்ச்சல் நோயும் பரவுவதற்கு வாய்ப்புகள் அதிகம். லெப்டோஸ் பைரோசிஸ் பாதிக்கப்பட்ட எலி, நாய் ஆகியவற்றின் சிறுநீர் தேங்கி வழிந்து ஓடும் இடத்தில் கால்பட்டால்கூட நோய் பரவும்.

இ) தாதுஉப்புக்கள் மற்றும் இரசாயன கழிவுகள் : கால்நடை களுக்கு அளிக்கப்படும் குடிநீரில் நைட்ரேட், அம்மோனிய ாபோன்ற தாது உப்புக்களினாலும், இரசாயன கழிவு, சாக்கடை கழிவு நீர் கலப்பதாலும் வயிறு உப்புசம், நச்சுத்தன்மை, பால் உற்பத்தி குறைவு ஆகியவை ஏற்படுவதற்கு சாத்தியமாகிறது. கோடை காலங் களில் கால்நடைகளுக்கு குட்டை நீரை குடிநீராக பயன்படுத்து வதால் நோயின் தீவிரம் இன்னும் அதிகமாகிறது. எனவே கால்நடைகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் உபயோகமே நோய் தடுப்பு முறையாகும்.

**குடிநீரை சுத்தப்படுத்தி பயன்படுத்தும் முறை**

கால்நடைகளுக்கு குடிப்படிதற்காக கொடுக்கும் தண்ணீர் எப்பொழுதும் சுத்தமானதாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கால்நடைகளுக்கு அளிக்கப்படும் நீரானது சுத்த மாகவும், கிருமிகள் இல்லாமலும், துர்நாற்றமில்லாமலும் இருத்தல் மிகவும் அவசியம். அசுத்தமான நீரில் உள்ள கிருமிகள் மூலம் கால்நடைகளுக்குப் பல நோய்கள் பரவ வாய்ப்பு உண்டு. தண்ணீரில் இருக்கும் ஈ. கோலை மற்றும்இதர நோய்க் கிருமிகளை அழித்து சுத்தமான குடி தண்ணீராக மாற்றுவதற்கு குளோரின் அல்லது ப்ளீச்சிங் பவுடர் பயன்படுத்தலாம். 1000 லிட்டர் தண்ணீருக்கு 5 முதல் 8 கிராம் ப்ளீச்சிங் பவுடர் கலந்து 12 மணி நேரம் கழித்து கால்நடைகளுக்கு குடிநீராக பயன்படுத்தலாம். கால்நடைப் பண்ணையில் 2 குடிநீர்த் தொட்டிகள் அமைக்க வேண்டும். காலையில் ஒரு தொட்டியிலும், மாலையில் மற்றொரு தொட்டியிலும் ப்ளீச்சிங் பவுடர் போட வேண்டும். காலையில் ப்ளீச்சிங் பவுடர் போட்ட தண்ணீரை மாலையிலும், மாலையில் போட்ட தண்ணீரை மறுநாள் காலையிலும் கால்நடைகள் குடிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். தொட்டியில் பாசி பிடிக்காமல் இருக்க 3 மாதத்திற்கு ஒரு முறை தண்ணீரை காலி செய்து, சுண்ணாம்பு பூசி காய்ந்த பின் மீண்டும் நிரப்ப வேண்டும். தொட்டிக்குள் குப்பை, இலை மற்றும் இதர கழிவுகள் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கால்நடைகள் குடிக்கும் தண்ணீர் இதர கழிவு நீர் மற்றும் இதர கால்நடைகளின் கழிவுகள் கழக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தொட்டி அல்லாமல் வேறு பாத்திரங்களை கால்நடை களுக்கு குடிநீர் கொடுக்க பயன்படுத்தும் பொழுதும் அவற்றை

தினமும் சுத்தப்படுத்திபயன்படுத்த வேண்டும். சுத்தமான குளம், குட்டை ஆகியவற்றில் மட்டுமே கால்நடைகளை நீர் அருந்த அனுமதிக்க வேண்டும். கழிவுநீர்கலக்கக்கூடிய,பாசிபடிந்தமற்றும் நீர்வற்றிய குளம், குட்டைகளிலும் நீர் அருந்த அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு கால்நடைகளுக்கு அளிக்கக் கூடிய குடிநீரில் கால்நடைகளை வளப்போர் சிறிது கவனம் செலுத்தி சுத்தமான குடிநீரை கால்நடைகளுக்கு அளிப்பதன் மூலம் கால்நடைகளுக்கு அசுத்தமான நீரால் பரவக்கூடிய பெரும்பான்மையான நோய்களை தடுத்து கால்நடைகளின் ஆரோக்கியத்தையும் உற்பத்தித் திறனையும் பாதுகாக்க முடியும்.

தகவல் : ***ஆ.சசிகலா, தொழிற்நுட்பர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை – 5.***

# வாழை விவசாயி வயலில் நேரடிப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், அக்.21

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில்குடி கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் ஃப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் வாழை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயியின் வயலில் நேரடிப் பார்வை மேற்கொண்டனர்.

இந்த வயல் பார்வையின்போது, வாழை சாகுபடிக்கான நிலத் தேர்வு, ரகங்கள், நடவு முறைகள், உர மேலாண்மை, நீர்ப்பாசன முறைகள், களை மேலாண்மை மற்றும் பூச்சி, நோய் மேலாண்மை முறைகள் குறித்த தகவல்கள் சேகரிக்கத்தனர். மேலும், நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள், உற்பத்திச் செலவுகள், மகசூல் மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள் குறித்த விவரங்கள் விவசாயியிட மிருந்து பெறப்பட்டனர். வாழை சாகுபடியில் எதிர்கொள்ளப்படும் முக்கியப் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் சாகுபடியின் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்தும் கேட்டறிந்தனர். இதன் மூலம், வாழை சாகுபடி தொடர்பான கள அனுபவங்களும், விவசாய முறைகள் குறித்த நடைமுறை அறிவும் மாணவர்கள் பெற்றனர்.

# காளான் வளர்ப்பு அலகை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், அக்.21

கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வேல்குடி கிராமத்தில் செயல்பட்டு வரும் வணிக ரீதியிலான காளான் வளர்ப்பு அலகைப் பார்வையிட்டனர்.

இந்த அலகை நிர்வகித்து வரும் கவிப்பிரியா மற்றும் இளங்கோவன் ஆகியோர், காளான் வளர்ப்பு முறைகள், வித்து உற்பத்தி, மூலப்பொருட்கள் தயாரித்தல் மற்றும் காளான் உற்பத்தி மேலாண்மை குறித்து மாணவர்களுக்கு விளக்கினர்.

காளான் வித்து உற்பத்திக்கான அறை, திசு வளர்ப்பு அறை, கிருமி நீக்கம் செய்வதற்கான வசதிகள், ஆட்டோகிளேவ் மற்றும் லேமினார் ஏர் ஃப்ளோ கருவி உள்ளிட்ட வசதிகளை மாணவர்கள் பார்வை யிட்டனர். மேலும், நெல் வைக்கோலைப் பயன்படுத்திக் காளான் வளர்ப்பிற்கான படுக்கைகளைத் தயாரிக்கும் முறையையும் அறிந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து, மாணவர்கள் சிப்பிக் காளான் வளர்ப்பிற் கான உறைகளைத் தயாரித்தும், பால் காளான் வளர்ப்பில் உறை களுக்கு மேல் மண் கலவை இடும் (Casing) செயல்முறை யையும் நேரடியாகச் செய்து பயிற்சி பெற்றனர். இந்தக் களப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் வணிக ரீதியிலான காளான் வளர்ப்பு நுட்பங்கள், உற்பத்தி செயல்முறைகள் மற்றும் காளான் வளர்ப்பு அலகின் செயல்பாடுகள் குறித்த நடைமுறை அறிவைப் பெற்றனர்.

# குழந்தைகளுக்கு ஆரோக்கிய உணவு விழிப்புணர்வு நிகழ்ச்சி!



சிவகங்கை, அக்.21

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அங்கன்வாடியில், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகள், பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவ ஸ்ரீ, செ.ராஜேஸ்வரி சார்பில், குழந்தைகளுக்கு ஆரோக்கியமான

உணவு – ஆரோக்கியமான குழந்தை தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவுகள் மற்றும் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய துரித உணவுகள் குறித்து எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டது. பொம்மலாட்டம் மற்றும் காகித உருவங்கள் மூலம் விளையாட்டுத் தனமாகக் கற்றல் செயல்பாடுகள் நடத்தப்பட்டன. காய்கறிகள், பழங்கள் மற்றும் சத்தான உணவுகளை உட்கொள்வதன் முக்கியத் துவம் குறித்தும், துரித உணவுகளைத் தவிர்த்து ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பங்கேற்ற இந்நிகழ்ச்சி, சிறு வயதிலேயே ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை வளர்த்து கொள்ள உதவும் வகையில் அமைந்தது.

## நிலவாரப்பட்டி கிராமத்தில் உயிர் உரங்கள் குறித்து செயல்விளக்க நிகழ்ச்சி

சேலம், அக்.21



சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், நிலவாரப்பட்டி கிராமத்தில் பாரம் பரிய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களின் பயன்பாடுகள் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தும் வகையில் செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களான லோகேஷ், மணிவாசகர், மதன், மதன்ராஜ், முகேஷ் குமார், முகில் தர்ன், முத்துசீனிசிதம்பரம், நந்தகுமார் மற்றும் நடராஜ் ஆகியோர், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ், வேளாண்மை உதவி இயக்குநர் சாகுல் அமீத் மற்றும் வேளாண்மை அலுவலர் சங்கீதா ஆகியோருடன் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பாரம்பரிய நெல் சாகுபடி செய்யும் விவசாயி விஜயன், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முகவர் களின் பயன்பாடுகள், நன்மைகள் மற்றும் அவற்றைப் பயன் படுத்தும் முறைகள் குறித்து மாணவர்கள் விளக்கினர். மேலும், நெற்பயிரில் இலைவழித் தெளிப்பு (Foliar Spray) முறையின் முக்கியத்துவம் மற்றும் அதனைச் செயல்படுத்தும் நடைமுறைகள்

குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. உயிர் உரங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தி, நெற்பயிரின் வளர்ச்சியை ஊக்குவித்து, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பாரம்பரிய நெல் சாகுபடியை மேற் கொள்ளலாம் என விவசாயிக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச் சியின் முக்கிய நோக்கம், பாரம்பரிய நெல் சாகுபடியில் உயிர் உரங் கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, விவசாயிகளிடையே இயற்கை சார்ந்த வேளாண்மை முறைகளை ஊக்குவிப்பதாகும்.


Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் — நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் — ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் — தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் — அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING — விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் — ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741